பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 4 (16—2—68) வெள்ளி ★ வெளியூர்: மாசி 5 (17-2—68) சனி [இதழ்: 204

துண்டு விழும் வரவு-செலவுத் திட்டம்

ஆந்திரச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் அளித்தார்

ஐதராபாத், பிப். 15—

வருவாய் இனத்தில் ரூ. 5.67 கோடி துண்டுவிழும் வரவு-செலவுத் திட்டத்தை ஆந்திரச் சட்ட மன்றத்தில் அளித்த முதலமைச்சர் பிரம்மானந்த ரெட்டி, 'துண்டு விழும் தொகையில் ஒரு பகுதியை ஈடு செய்வதற்குப் புதிய வரி விதிப்பு இருக்கும்' என்று தெரிவித்தார்.

1968—69-ல், வருவாய் ரூ. 100 கோடி; செலவு ரூ. 204.67 கோடி எனத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

"அடுத்த ஆண்டு திட்டப் பணிகளுக்காக மத்திய உதவி ரூ. 53 கோடி எதிர்பார்க்கிறோம்; இதில், ரூ. 4.31 கோடி மானிய உதவி; செலவு ரூ. 14.04 கோடி; நிகரம் வருவாய்க் கணக்கில் துண்டுவிழுவது ரூ. 5.67 கோடியாகும்" என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

அண்ணா அனுப்பிய உலகத் தமிழ் மாநாட்டு மலர்

குடியரசுத் தலைவரிடம் மத்திய அமைச்சர் அளித்தார்

புதுடில்லி, பிப். 15—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களின் சார்பில், மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் சந்திரசேகர், தமிழக அரசு வெளியிட்ட இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பு மலரை, குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களிடம் அளித்தார்.

குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்ட நினைவுப் பெட்டகத்தில், திருக்குறள் பிரதி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

நினைவுப் பெட்டகத்தின்மீது உருண்டையான உலக வடிவம், வெள்ளியில் அமைந்துள்ளது!

தங்க இழையினாலான தென்னிந்தியக் கோபுரம், அழகிய பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பீடத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கும் 48 விதமான தாதுப் பொருள்கள்—பாறைகள், மாதிரிக்கு வைக்கப்பட்டுள்ளன!

சனவரி 3-ந்தேதியன்று இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்கிவைத்த குடியரசுத் தலைவருக்கு, சிறப்பு மலரும், இந்தப் பெட்டகமும், தமிழகத்தைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியது.

கல்லூரி முதல்வராகத் தமிழாசிரியர்கள்

சென்னை, பிப். 15—

"ஆறு கல்லூரிகளில், தமிழாசிரியர்கள், கல்லூரி முதல்வராகப் பணியாற்றிவருகின்றனர்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

சி. சுப்பிரமணியம் மீதான உரிமைப் பிரச்சினை

திங்கட்கிழமை அவைத் தலைவர் தீர்ப்பு

சென்னை, பிப். 16—

தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றிய மொழித் தீர்மானம் பற்றி, திண்டுக்கல்லில் பேசிய தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், 'பெருத்த அரசியல் மோசடி' என்று குறிப்பிட்டது தொடர்பாக திரு. சி. சுப்பிரமணியம் மீதும், அந்தக் கூற்றை வெளியிட்ட 'இந்து' இதழ் மீதும் கழக உறுப்பினர் திரு. இரெ. இளம்வழுதி எழுப்பியிருந்த உரிமைப் பிரச்சினை இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதுபற்றித் தமது விளக்கத்தை அளிக்குமாறு இளம்வழுதியை அவைத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

தோழர் இளம்வழுதி பேசுகையில், 'அவையை அவமதிக்கும் கருத்துடனேயே இந்தச் சொற்றொடர் அமைந்திருக்கிறது' என்று கூறி அதற்கான பல சான்றுகளுடன் விளக்கினர்.

அடுத்து, எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் கருத்தறிவிக்கையில், 'அரசியல் மோசடி' என்றுதான் சி. சுப்பிரமணியம் சொல்லியிருக்கிறாரே தவிர, வெறும் 'மோசடி' என்ற சொல்லை மட்டும் பயன்படுத்தவில்லை என்றும், எனவே, மோசடி என்பதில் உள்ள வேகம் குறைந்துவிட்டது என்றும், சட்டமன்றத் தீர்மானம் பற்றிக் கருத்தறிவிக்க வெளியில் உள்ளவர்களுக்கும் உரிமை உண்டு என்றும் வாதித்தார்

அவை முன்னவரான அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் பேசுகையில், இந்த அரசின் கொள்கையைப் பற்றியோ, திட்டங்களைப் பற்றியோ யாரும் கருத்தறிவிக்கலாம் என்றும், ஆனால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தைப் பற்றி இப்படி 'மோசடி' என்று வர்ணிப்பது அவையின் மதிப்பைக் குறைத்து இழிவுபடுத்தும் தன்மையிலேயே உள்ளது என்றும் கருத்தறிவித்தார்.

சுதந்தராக் கட்சி உறுப்பினர் திரு. ஹண்டே அவர்கள் எழுந்து, 'சுப்பிரமணியத்தின் கூற்று அவையில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரையும் பாதிக்கிறது' என்றும், எனவே, 'சுப்பிரமணியத்தையே இங்கு தருவித்து விளக்கமளிக்கச் செய்யவேண்டும்' என்றும் கோரினர்.

இறுதியாக அவைத் தலைவர் திரு. ஆதித்தனர், இது குறித்து எல்லாச் சட்ட விதிகளையும் நுணுகி ஆராய்ந்து, திங்கட்கிழமை தமது தீர்ப்பை வழங்குவதாக அறிவித்தார்.

மருத்துவமனையில் அண்ணா உடல்நிலை

உடல்நலக் குறைவு காரணமாகச் சென்னை அரசினர் மருத்துவமனையிலிருக்கும் முதலமைச்சர் அண்ணா அவர்கள், மேலும் சில நாட்கள் மருத்துவமனையிலேயே இருக்கவேண்டும் என்று மருத்துவர்கள் கருதுவதால் திங்கட்கிழமையன்றுதான் இல்லம் திரும்புவார் எனத் தெரிகிறது.

தி. மு. க. ஆட்சியை 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டுமாம்

நாடாளுமன்றத்தில் இந்தி வெறியரின் ஓலம்!

புதுடில்லி, பிப். 15—

நாடாளுமன்ற மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைமீதுஇன்று நடைபெற்றவிவாதத்தில் கலந்துகொண்டு பேசிய பலரும், 'நாட்டு ஒற்றுமை குலைவதற்கு, மொழி, காரணமாக அமையக்கூடாது' என்றும், 'நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கு அதிகச் சுமையும், மறுபகுதியினருக்குச் சுமை குறைவும் ஏற்பட அனுமதிக்கக்கூடாது' என்றும் வற்புறுத்தினர்.

இந்திவெறியரான சேத் கோவிந்த தாஸ் பேசுகையில், 'தமிழ்நாட்டிலுள்ள தி. மு. க. ஆட்சியை நீக்கம் (டிஸ்மிஸ்) செய்யவேண்டும்' என்று கோரினர்.

அண்மையில் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய 'பள்ளிகளில் இந்தி கற்பிப்பதைக் கைவிடச் செய்யும் தீர்மானம், 'அரசியல் சட்டத்துக்கு எதிரானது' என்றும் அவர் வாதிட்டார்.

,'அரசியல் சட்டத்தில், 'இந்தி ஆட்சி மொழியல்ல' என்று ஆனால்தான் தமிழகச் சட்டமன்றம் அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றமுடியும்" என்றும் கூறினர்.

★

கருத்திருமன் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானம்

அவைத் தலைவரால் அனுமதி மறுக்கப்பட்டது

சென்னை, பிப். 16—

கோவையில், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியமும். மத்திய துணையமைச்சர் இராமசாமியும் கலந்துகொண்ட கூட்டத்தில், வன்முறைகள் நடந்ததாகக் குறிப்பிட்டு, 'அதுபற்றி விவாதிக்கச் சட்டமன்ற நிகழ்ச்சிநிரலை ஒத்திவைக்க வேண்டும்' என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் கொண்டுவந்திருந்த தீர்மானம் இன்று அவைத் தலைவரால் அனுமதி மறுக்கப்பட்டது.

தமது தீர்மானத்தை வற்புறுத்தி திரு. கருத்திருமன் பேசுகையில், 'மாணவர்களை முன்நிறுத்தி சமூக விரோதச் சக்திகள் வன்முறையில் இறங்கியதாக'க் குறிப்பிட்டார்.

அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் இதுபற்றிக் கருத்தறிவிக்கையில், இது அன்றாட நிர்வாக நடைமுறைகளில் அடங்கிய பிரச்சினை என்றும், சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய பிரச்சினையல்ல என்றும், காவல் துறையினர் அமைதி—ஒழுங்கை நிலைநாட்டவே பல முறைகளை வகுத்துக் கொண்டு செயலாற்றிவருகின்றனர் என்றும், சில சமயங்களில் கட்டுமீறிய நிலையும் ஏற்பட்டுவிடுகிறது என்றும், இப்படிப்பட்ட நிலை இப்போதுதான் ஏற்பட்டது என்பதற்கில்லை-பன்னெடுங்காலமாகவே—வெள்ளையர் ஆட்சிக்காலத்திலிருந்தே ஏற்பட்டுவந்திருக்கிறது என்றும் கூறி, எவ்வளவோ பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தும் காந்தியாரே சுடப்பட்ட நிலையையும், இந்திரா காந்தி கல்லெறிக்காளாகி மூக்கில் காயம்பட்டதையும், மதுரையில் நடந்த திராவிடர் கழக மாநாடு கொளுத்தப்பட்டதையும் சுட்டிக்காட்டினர்.

மேலும், கோவைச் சம்பவங்கள் குறித்து யாரும் மனநிறைவு கொள்ளவில்லை என்றும், முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தி அறிந்ததுமே வருத்தம் தெரிவித்து அறிக்கை விடுத்திருக்கிறார்கள் என்றும், சி. சுப்பிரமணியம் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவர் பதவியேற்ற பின்னும், அதற்கு முன்பும் தமிழகத்தில் பல பகுதிகளுக்கும் சென்று கூட்டங்களில் கலந்துகொண்டிருக்கிறார் என்றும் அப்போதெல்லாம் அமைதியாகவே கூட்டம் நடந்திருக்கிறது என்றும், மாணவர் பற்றி அவர் கூறிய கூற்றால்தான் மாணவர்கள் கொதிப்படைந்து கட்டுமீறியிருக்கிறார்கள் என்றும், திரு. சுப்பிரமணியம் அவர்கள் தமது கூற்றுக்கு வருத்தம் தெரிவித்து திரும்பப் பெறுவதாகக் கூறியதும், மாணவர்கள் கொதிப்புத் தணிந்து, நேற்று நடந்த கூட்டம் அமைதியாக முடிந்திருப்பது குறித்து எல்லோரும் மகிழ்ச்சிகொள்வதாகவும் கூறினர்.

பிறகு அவைத் தலைவர் திரு. ஆதித்தனர் அவர்கள், முன்பிருந்த அவைத் தலைவர்கள் பலமுறை இத்தகைய ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு வழங்கியிருக்கும் தீர்ப்புக்களைப் பின்பற்றித் தாமும் இதற்கு அனுமதியளிக்க மறுப்பதாக அறிவித்தார்.

'மாணவர் பற்றிக் கூறியதைத் திரும்பப் பெறுகிறேன்'

சி. சுப்பிரமணியம் அறிவிப்பு

சென்னை, பிப். 15—

"'மாணவர்கள் தங்கள் கல்வியில் கவனம் செலுத்தவேண்டும் என்ற கருத்தில் பொதுவாக நான் கூறியது மாணவர்களின் மனத்தைப் புண்படுத்துமானல், நான் சொன்னதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்' என்று நான் பிப். 9-ம் நாள் பேசிய கூட்டத்திலும், மற்றக் கூட்டங்களிலும், கூறினேன்; அதையே மாணவர்களுக்கு மீண்டும் கூறுகிறேன்; மாணவர்கள், கல்லூரிகளுக்கும் பள்ளிகளுக்கும் சென்று அமைதி காக்க வேண்டும்; மாணவர்கள் முன்னேற்றத்துக்கு நான் என்றும் பாடுபடுவேன்; மாணவர்களின் நண்பனாக இருப்பேன்"

என்று, தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவர் சி. சுப்பிரமணியம், செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது:—

"சமூகத்தின் இன்றைய நிலை பற்றிப் பேசுகையில், பேச்சின் ஒரு பகுதியாக மாணவர்கள் பற்றிக் குறிப்பிட்டேன்; மாணவர்கள் பற்றித் தனியாகப் பிரித்துப் பேசவில்லை.

"மாணவர்களின் எதிர்ப்பு, வன்முறையில் கொண்டுபோய் விட்டது துரதிருஷ்டமானது; 'சமூக விரோதி'கள் கலந்துகொண்டதால் இந்த நிலை ஏற்பட்டது."

தேசீய மாணவர் படையில் இந்தி நீக்கம்

தமிழக அரசின் முடிவு பற்றி டில்லி ஆய்வு

"தேசிய மாணவர் படை சம்பந்தமான கட்டளைச் சொற்கள் தற்போது இந்தியில் இருக்கின்றன; அவற்றை ஆங்கிலச் சொற்களாகவோ அல்லது தமிழ்ச் சொற்களாகவோ மாற்றும்வரையில், தமிழகத்தில் தேசிய மாணவர் படை சம்பந்தமான பயிற்சியோ, வகுப்புக்களோ, முகாம்களோ நடத்தவேண்டாம் என்று தமிழக அரசு கூறிய யோசனையை இந்திய அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது"

என்று தற்காப்புத் துறைத் துணையமைச்சர் எம். ஆர். கிருஷ்ணு, மாநிலங்களவையில் ஒரு கேள்விக்குப் பதில் கூறுகையில் தெரிவித்தார்.

"தமிழகத்தில் தேசிய மாணவர் படையினர், குடியரசுத் தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளவோ அல்லது தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்தவோ மறுத்ததாகக் கூறப்படுவது தவறு" என்றும் அவர் மறுத்தார்.

நம் நாடு

ஆசிரியர் : இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 மாசி 4 (16—2—68) வெள்ளி

தேசாயின் விதண்டாவாதம்!

மத்திய–மாநில அரசாங்க ஊழியர்களுக்கிடையில், ஊதியத்திலும் கிராக்கிப் படியிலும் ஏற்றத்தாழ்வு இருந்துவருகிறது. தமிழக அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில், சில திங்களுக்கு முன் ஏற்றத்தாழ்வு இல்லாது ஆக்கப்பட்டது.

இவ்வாறு ஏற்றத்தாழ்வு இல்லாது ஆக்குவதற்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள், மத்திய அரசின் நிதி அமைச்சரைச் சந்தித்துப் போதிய நிதி உதவி தருமாறு வேண்டிக்கொண்டார். அவ்வேண்டுகோளையும், மற்ற இனங்களுக்கு நிதி உதவி கோரப்பட்டதைப் புறக்கணித்தது போன்றே நிதி அமைச்சர் புறக்கணித்துவிட்டார்.

ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கப்படும் தமிழக அரசாங்க ஏற்பாட்டிற்குக் கோரப்பட்ட நிதியுதவிக்கும், மத்திய அரசாங்க நிதி அமைச்சர் உதவி செய்யவில்லை. 'படி அரிசி ஏற்பாட்டினைச் செயலாற்றுவதற்குமுன் தம்மைக் கலந்துகொண்டா தமிழக அரசு செயலாற்றியது' என்ற விதண்டாவாதக் கேள்வி ஒன்றையும் மத்திய அரசாங்க நிதி அமைச்சர் வீசினார்.

ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்குதல் என்ற ஏற்பாட்டைச் செயலாற்றுவதற்கு முன்னரே, அவ்வேற்பாட்டைத் தம்மிடம் காட்டி, அதனால் துண்டு விழக்கூடிய இழப்புத் தொகையை மானியமாகத் தரும்படி தம்மிடம் கோரியிருக்கும் பட்சத்தில், தாராளமாக நிதியுதவி தரத் தாம் முடிவு கட்டியிருந்தவர்போல் நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறினார். ஆனால், உண்மை அதுவல்ல; படி அரிசி ஏற்பாட்டைச் செயலாற்றுவதற்கு முன்னர், அவ்வேற்பாட்டை மத்திய நிதி அமைச்சரிடம் அறிவித்திருந்தால் என்ன நடைபெற்றிருக்கும்? 'ஏற்பாடு சிறந்த ஏற்பாடுதான்; செயலாற்றப்பட வேண்டியதுதான்; தாமதிக்காமல் செயலாற்றுங்கள்; இழப்புத் தொகை எவ்வளவானாலும் மானியமாகத் தரத் தயார்' என்று மத்திய நிதி அமைச்சர் சொல்லி இருப்பார்?–நிச்சயமாக இல்லை!

'ஏற்பாடு தேவையற்றது; செயலாற்றக்கூடாது' என ஒரே வார்த்தையில் மத்திய நிதி அமைச்சர் தமக்கே உரிய மிடுக்குடன் சொல்லிவிட்டிருப்பார்!

இத்தொடர்பில், தமிழக அரசின் மற்றொரு நியாயமான கோரிக்கையை, அதே நிதியமைச்சர் ஏற்க மறுத்துவிட்டதையும் சிந்திக்க வேண்டும். சென்ற ஆண்டில் மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தவணைத் தொகையை, 'மேலும் சிறிது காலத்துக்குச் செலுத்தாமலிருந்திட அனுமதி தர வேண்டும்' எனத் தமிழக அரசு கோரியது. இக்கோரிக்கை நியாயமானதே; இந்த நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவும் நிதியமைச்சர் மறுத்துவிட்டார்.

இவ்விரண்டும் பழங்கதை. இப்பொழுது மத்திய நிதியமைச்சர் தமது சொல்லாலும் செயலாலும், பொதுவாக மாநில அரசுகளுக்கும் குறிப்பாகத் தமிழக அரசுக்கும் புதிய தொல்லையை உருவாக்கிவிட்டிருக்கின்றார்.

சென்ற ஆண்டு இறுதியில், அதுவரை மத்திய அரசு ஊழியர்கள் வாங்கிவந்த கிராக்கிப் படியின் அளவுக்குத் தமிழக அரசு ஊழியர்களின் கிராக்கிப் படியும் முதலமைச்சரால் உயர்த்தப்பட்டதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றோம். இதற்குப் பிறகு, மீண்டும் மத்திய அரசு ஊழியர்களின் கிராக்கிப் படியை, நிதி அமைச்சர் தேசாய் உயர்த்திவிட்டார்.

மத்திய அரசு ஊழியர்களின் கிராக்கிப் படி உயர்த்தப்பட்டால் அவ்வாறு உயர்த்தப்பட்ட அளவுக்குத் தங்களின் கிராக்கிப் படியையும் உயர்த்தித் தரவேண்டும் என மாநில அரசு ஊழியர்கள் கோருவர் என்ற உண்மையை, மொரார்ஜி தேசாய் அறியாதவரல்லர். எதிர்பார்த்தபடியே, மொரார்ஜியின் செயல் தமிழக அரசு ஊழியர்களிடம் எதிரொலித்துக்கொண்டிருக்கிறது.

ஒரே மாதிரியான பணியில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்கள்–மத்திய அரசைச் சேர்ந்தவர்களாக இருந்திட்டாலும் மாநில அரசுகளைச் சேர்ந்தவர்களாக இருந்திட்டாலும்–ஒத்த ஊதியமும் கிராக்கிப் படியும் பெறுவதுதான் முறை; இதில் 'ஏற்றத்தாழ்வு இருப்பது நியாயமல்ல. 'இந்த ஏற்றத்தாழ்வைக் களைந்தெறிய வேண்டும்' என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

ஆனால், மாநில அரசுகளுக்குக் கிடைக்கின்ற வருவாய்க்கும்–மத்திய அரசுக்குக் கிடைக்கின்ற வருவாய்க்கும் வித்தியாசம் உண்டு. இரண்டு அரசுகளுக்கும் உள்ள வருவாய்த் துறைகளிலும், அவற்றின் அளவிலும் தன்மையிலும் வித்தியாசம் நிரம்ப உண்டு. இதன் காரணமாகவே, மத்திய அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருவதுபோன்ற அளவு ஊழியமும் கிராக்கிப் படியும்–அவ்விரண்டும் நியாயமானவை என உணர்ந்திருந்தாலும்–மாநில அரசுகளால் கொடுக்க முடிவதில்லை.

தங்களுக்கு இயல்பாக இருந்துவருகின்ற நிதி பற்றுக்குறையின் காரணமாக, தங்கள் ஊழியர்களின் கிராக்கிப் படிக் கோரிக்கையை நிறைவு செய்ய விரும்பினாலும்--விரும்பியவண்ணம் நிறைவு செய்ய முடியாமல் மாநில அரசுகள் திண்டாடுகின்றன.

இந்த நிலையில், நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய், இந்தக் கிராக்கிப் படி பற்றிப் புதிய விளக்கம் அளித்திருக்கின்றார்; அதாவது, 'மத்திய அரசு ஊழியர்களுக்கும்–மாநில அரசு ஊழியர்களுக்கும், ஊதிய அளவிலும் கிராக்கிப் படி அளவிலும் ஏற்றத் தாழ்வு இருக்கத்தான் செய்யும்; 'இன்னும் நீண்டகாலத்துக்கு அதைச் சமன் செய்ய இயலாது' எனக் கூறியுள்ளார்.

இப்படிச் சொன்னதுடன் மட்டுமன்றி, 'அவ்விரண்டும் சமன் செய்யப்பட வேண்டும் என நான் நினைக்கக்கூட இல்லை' என்றும் அவர் கூறியிருப்பதுடன், 'நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் ஊதிய அளவில் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது; இந்த வித்தியாசத்துடன் காலம் கழிக்கத்தான் வேண்டும்' என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுவாக மாநில அரசுகளும், குறிப்பாகத் தமிழக அரசும் தங்கள் ஊழியர்களின் கோரிக்கையை ஒப்புக்கொண்டு, மத்திய அரசு ஊழியர்கள் இன்று பெற்றுவருகின்ற அளவுக்குப் பஞ்சப் படியை உயர்த்த முனைந்தால், அதற்காகக்கூடிய கூடுதலான தொகையை மானியமாக மத்திய அரசு வழங்குமா என்பதுதான் பிரச்சினை. இதற்கும் நிதி அமைச்சர் தேசாய், ஐயத்திற்கிடமின்றித் தெளிவாகப் பதில் அளித்துவிட்டிருக்கின்றார்; அதாவது, தனது ஊழியர்களுக்குக் கிராக்கிப் படியின் அளவை உயர்த்தத் தமிழக அரசு துணியுமானால், அதற்காகக்கூடிய அதிகமான தொகையைத் தானே தேடிக்கொள்ளத்தான் வேண்டும்; அதற்காக ஒரு காசும் மத்திய அரசால் கொடுக்க முடியாது' எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டிருக்கிறார்.

'கொள்' என்றால் வாயைத் திறப்பது---'கடிவாளம்' என்றால் வாயை மூடிக் கொள்ளுவது---என்ற குதிரையின் கதைபோல் மத்திய நிதியமைச்சரின் விளக்கம் அமைந்திருக்கிறது!

—கா. க.

தொகுதியை மறந்த காங்கிரசு உறுப்பினர்

சட்டமன்றத்தில் சுவையான நிகழ்ச்சி

சென்னை, பிப். 15—

"சென்னை பழைய மாம்பலம் ஏரிக்கரைச் சாலையை அகலப்படுத்தும் உத்தேசம் எதுவும் இப்போது இல்லை"

என்று சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் திரு. முத்துசாமி கூறினார்.

காங்கிரசு உறுப்பினர் திரு. கே. விநயகம் எழுந்து, 'அது என் தொகுதியில் இருப்பதால்......' என்று ஆரம்பித்ததும், அவையில் இருந்தோர், 'கொல்' என்று சிரித்தனர்!

அமைச்சர் கருணாநிதி, 'அது என் தொகுதி' என்றார்; அப்புறந்தான் புரிந்தது அவருக்கு—தாம் பழைய நினைப்பில் பேசியது!

[திரு விநயகம் இப்போது திருத்தணித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவரா வார்; இதற்கு முன்னர் தியாகராய நகர்த் தொகுதியில் 1957-ல் தேர்ந்தெடுக்கப்பட்டதை நினைவில் கொண்டு பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது]

உடன் அவர், தம்மைத் திருத்திக்கொண்டு, 'இப்போது அந்தத் தொகுதியை அமைச்சர் கருணாநிதியிடம் கொடுத்துவிட்டேன்' என்று கூறிச் சமாளித்தார்.

"அந்தச் சாலை மிகக் குறுகியதாக இருப்பதால், அதில் போகும் நம் அரசு பஸ்கள் அடிபட்டு நொறுங்கிவிடாமலிருக்கவாவது அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?" என்று கேட்டார்.

அதற்கு அமைச்சர் திரு. முத்துசாமி பதிலளித்ததாவது:—

"அந்தச் சாலை சென்னை மாநகராட்சியைச் சேர்ந்தது; 'அதை அகலப்படுத்தும் திட்டம் இருக்கிறதா' என்று மாநகராட்சியைக் கேட்டதற்கு, 'திட்டம் இல்லை' என்று கூறிவிட்டார்கள்."

அடுத்து, இந்தச் சாலையை அகலப்படுத்தவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி சுதந்தராக் கட்சி உறுப்பினர் டாக்டர் எச். வி. ஹண்டே ஒரு கேள்வி கேட்டார்.

அதற்கு உள்ளாட்சி அமைச்சர் பதிலளித்ததும், அமைச்சர் கருணா

(5-ம் பத்தி பார்க்க)

'டி. வி. எஸ். -- கீவ்ராஜ் நிறுவனங்களிடம் அடிச் சட்டங்கள் வாங்குவது நிறுத்தப்பட்டது; லேலண்டு--பென்ஸ் சட்டங்களே இப்போது வாங்கப்படுகின்றன'

பஸ் தொழிலாளர் நலன்களில் அரசு காட்டிவரும் அக்கறை--அமைச்சர் கருணாநிதி விளக்கம்

சென்னை, பிப். 15—

"அரசுப் போக்குவரத்துத் துறையில் ஒரு பேருந்தின் கூண்டு (பாடி) கட்டுவதற்கு எவ்வளவு செலவாகிறது"

என்று சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் ஏ.எம். இராசா கேட்ட கேள்விக்குப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி பின்வருமாறு விடையளித்தார்:—

"ஒரு பேருந்தின் கூண்டு கட்டுவதற்கு சராசரியாக ரூ. 12,870 ஆகிறது; வெளியூர் பேருந்துக்கு ரூ. 13,838-ம், விரைவுப் பேருந்துக்கு ரூ. 26,270-ம் செலவாகிறது"

இந்தப் பதிலைத் தொடர்ந்து கேட்கப்பட்ட பல்வேறு துணைக் கேள்விகட்கும் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்ததாவது:—

"நாகர்கோயிலில் உள்ள கூண்டு கட்டும் தொழிற்சாலையில் மாதம் 10 வண்டிகளுக்குக் கூண்டு கட்டப்படுகிறது. சென்னை—குரோம்பேட்டையில் உள்ள தொழிற்சாலைக்கும், நாகர் கோயிலில் உள்ள தொழிற்சாலைக்கும் கூண்டு கட்டுவதில் அதிக வித்தியாசமில்லை.

"மாடி பஸ் கட்டும் எண்ணம் தற்போது இல்லை. தனியார் நிறுவனங்களில் கூண்டு கட்டுவதற்கும், அரசுத் தொழிற்சாலையில் கூண்டு கட்டுவதற்கும் செலவில் வித்தியாசம் உண்டா என்பதற்குத் தகவல் இல்லை.

"அரசுத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வேலை கொடுக்கவும், மேலும் பல சலுகைகள் கொடுக்கவுமே அரசுத் தொழிற்சாலையிலேயே கூண்டுகள் கட்டப்படுகின்றன.

"ஏற்கனவே 4 ஆண்டுகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுவந்த டயர்களை 5 ஆண்டுகள் உழைக்கத் தக்க வகையில் அவற்றின் ஆயுளைக் கூட்ட இந்த அரசு தீர்மானித்துள்ளது.

பஸ் தடங்கள் தேசியமயமாக்கப்பட்டதும், தனியார் வசமிருந்த பஸ்களை அரசு வாங்கிக்கொள்வதில் ஒரு சிக்கல் ஏற்படுகிறது. சில நல்லவர்கள் அப்படியே அந்த பஸ்களை ஒப்படைப்பார்கள்; நல்லவரல்லாதவர்கள், பஸ்சில் உள்ள இயந்திரங்களை மாற்றி ஒப்படைக்கவும் முனையக்கூடும்; ஆகவே, பரிசீலித்துத்தான் வாங்கிக்கொள்ள வேண்டும்.

"முன்பிருந்த அரசு, பேருந்துகளுக்கான அடிச் சட்டத்தை (சேஸ்) டி.வி.எஸ். நிறுவனத்தின் மூலம் 'பர்கோ'வையும், கீவ்ராஜ் நிறுவனத்தின் மூலம் 'பெட்போர்டை'யும் வாங்கிவந்தது; இப்போதுள்ள அரசு அவைகளை வாங்கவேண்டாம் என்று முடிவு செய்துவிட்டது.

"அடிச் சட்டங்களின் தரத்தையும், உழைப்பையும் பொறுத்து, லேலண்டும், பென்சும் வாங்கப்படுகின்றன.

"குரோம்பேட்டையில் உள்ள கூண்டு கட்டும் தொழிற்சாலை 1,115 பேரும், நாகர்கோயிலில் உள்ள தொழிற்சாலையில் 193 பேரும் வேலை செய்கிறார்கள்.

"தொழிலாளர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவை நிச்சயம் ஏற்கப்படும் என்று உறுதி கூறப்பட்டு, அவற்றில் பெரும்பாலானவை நிறைவேற்றவும்பட்டிருக்கிறது. ஊக்க போனசாக 20 சதவிகிதம் கொடுக்கப்பட்டது. இப்போது 40 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது."

'சட்டமன்ற உறுப்பினர்களும் கட்டணம் செலுத்தியே பயணம் செய்யவேண்டும்'

'இலவசப் பயணச் சலுகை வழங்கும் எண்ணம் அரசுக்கு இல்லை'

சட்டமன்ற மேலவையில் அமைச்சர் மு. கருணாநிதி அறிவிப்பு

சென்னை, பிப். 14—

"சட்டமன்ற உறுப்பினர்களை, அரசுப் போக்குவரத்துத்துறை பஸ்களில் கட்டணம் இல்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கும் உத்தேசம் இல்லை" என்று சட்டமன்ற மேலவையில், கேள்விநேரத்தின்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

"'எக்ஸ்பிரஸ்' பஸ்களில் (கட்டணம் செலுத்தி) சட்டமன்ற—மேலவை உறுப்பினர்களுக்கு 'முதற்சலுகை' அளிக்கப்படுவது பற்றி அரசு ஆலோசிக்கும்" என்று மற்றோர் கேள்விக்கு அமைச்சர் பதில் கூறினார்.

தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கட்கான புதிய விடுதி

அமைச்சர் கருணாநிதி விளக்கம்

சென்னை, பிப். 16—

"மவுண்ட் ரோடு அரசுத் தோட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதி ரூ. 48.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டது; அது சனவரி 5-ம் நாளன்று குடியரசுத் தலைவரால் திறந்துவைக்கப்பட்டது; தொலைபேசி வசதிகள் மற்றும் சில வசதிகளைச் செய்து முடித்ததும், சட்டமன்றத் துறையினரிடம் ஒப்புவிக்கப்படும்"

என்று பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கும் இந்த விடுதியில் உறுப்பினர்களல்லாதவர்கள் தங்கிக்கொண்டிருப்பதாக உறுப்பினர்கள் சொன்னபோது, அமைச்சர் கூறியதாவது:—

"உலகப் பொருட்காட்சிக்காக வந்திருக்கும் வெளிநாட்டினர் தற்போது மேற்படி கட்டிடத்தில் தங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்; இதனால் ஏற்படும் வசதிக்குறைவுகளை உறுப்பினர்கள் பரந்த மனப்பான்மையுடன் பொறுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

(3-ம் பத்தி தொடர்ச்சி)

நிதி அவர்கள் எழுந்து, 'டாக்டர் ஹண்டே அவர்கள், என் தொகுதியில் உள்ள அந்தச் சாலைக்காகப் பரிந்து இவ்வளவு அக்கறை காட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' என்று சிரிப்பொலிகளிடையே கூறினார்.

ஒரு கட்சிக்கு மட்டுமே சொந்தமானதல்ல கதர்!

எல்லா மக்கட்கும் பொதுவானதாக்க தி.மு.க. அரசு முயற்சி

சட்டமன்றத்தில் அமைச்சர் முத்துசாமி விளக்கம்

சென்னை, பிப். 14—

"'கதர் எல்லா மக்களுக்கும் பொதுவானது' என்பது தான் காந்தியார் கொண்டிருந்த இலட்சியம்; அவருக்குப் பிறகு, கதரை ஒரு கட்சியார் மட்டும் தங்கள் தனிவுடைமையாக்கிக் கொண்டுவிட்டார்கள்"

என்று உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. மா. முத்துசாமி சட்டமன்றத்தில் வருத்தத்தோடு குறிப்பிட்டார்.

கதர் போர்டு தொடர்பான கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் விடையளித்ததையொட்டிப் பல்வேறு துணைக் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அப்போது சுதந்தரா கட்சி உறுப்பினர் திரு. ஆதிமூலம் எழுந்து, 'கதர் பற்றிய கேள்வி வரும்நாளன்றுவது அமைச்சர்கதர் அணிந்து அவைக்கு வந்தால் நன்றாக இருக்குமே' என்றார்.

அதற்கு அமைச்சர் முத்துசாமி கூறியதாவது :—

"கதர் அணியுமாறு யாரையும் கட்டாயப்படுத்தக்கூடாது என்பதுதான் இந்த அரசின் கொள்கை. விருப்பத்துக்கு மாறாகக் கட்டாயப்படுத்தினால் அதற்கு ஆதரவு கிடைக்காது; அவரவர் விரும்பினால் கதர் அணியலாம். எனக்குப் பக்கத்தில் அமர்ந்துள்ள சுகாதார அமைச்சர்கூட இன்று தூய கதர்தான் அணிந்திருக்கிறார்.

"அனைவருக்கும் பொதுவான கதர் போர்டில் ஒரே கட்சியைச் சார்ந்தவர்களை மட்டுமே உறுப்பினராக நியமித்துவிட்டதை மாற்றி, எல்லாருக்கும் இடம் கொடுக்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. அதே கட்சியைச் சேர்ந்த இரண்டொருவர் பெருந்தன்மையுடன் ஒதுங்கிக்கொண்டு அந்த இடத்தில் மற்றவர்களை நியமிக்க விட்டுக்கொடுத்திருக்கின்றனர்; மேலும் பலரையும் அதில் உறுப்பினராக்கும் வகையில் சட்ட விதிமுறைகளைத் திருத்துவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

"கதர் விற்பனை சென்றஆண்டைவிட இந்த ஆண்டு அதிகரித்திருக்கிறது; சுமார் ரூ. 15 இலட்சம் அளவுக்குக் கூடுதலாக விற்பனையாகியிருக்கிறது.

"போக்குவரத்துத் துறை ஊழியர்கள் கதர்தான் அணிய வேண்டும் என்ற கட்டாயமில்லை. கதர் அணிய விரும்பாதவர்கட்குக் கைத்தறித் துணி அளிக்கப்படுகிறது.

"விஞ்ஞான யுகத்தில் கதரை ஆதரிக்கலாமா என்று கேட்பதில் பொருளில்லை. இயந்திரங்களைக் கொண்டு உழவுத் தொழில் நடத்தும் இக்காலத்தில், உழவு மாடு வாங்கவும் கடன் கேட்கிற நிலை இல்லையா? அதைப்போல், கதர்த் தொழிலையும் நாம் ஆதரித்துத்தானாக வேண்டியுள்ளது. எல்லா வகையிலும் முன்னேற்றம் ஏற்படும் வரை கதர்த தொழிலும் இருந்துதான் தீரும்."

குடந்தையில் இரயில்வே மேம்பாலம்

நான்காம் திட்டத்தில் சேர்க்கப் பரிந்துரை

சென்னை, பிப். 15—

கும்பகோணம் இரயில் நிலையத்தின் கிழக்குப் பக்கத்தில் கும்பகோணம் – காரைக்கால் சாலையில் உள்ள இருப்புப் பாதை சாலைக் கடவில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது என்றும், அது ஏற்கப்பட்டதும் வரிசை முறைப்படியும் நிதி வசதிக்கேற்பவும் மேற்கொள்ளப்படும் என்றும், தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் கட்டவேண்டியிருந்தால் அதற்கான செலவில் பாதியை மத்திய அரசும், மறுபாதியை மாநில அரசும் ஏற்கும் என்றும் சட்டமன்றத்தில், கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

தமிழக ரயில் பாதைகளை அகற்ற வேண்டாம்

மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம்

சென்னை, பிப். 15—

தமிழகத்தில் உள்ள நான்கு இருப்புப் பாதைகளை அகற்றிவிட மத்திய அரசு கருதியிருப்பது குறித்து நேற்று சட்டமன்ற மேலவையில் கேள்விகள் எழுந்தன.

"தமிழகத்தில் உள்ள நான்கு இருப்புப் பாதைகளை எடுத்துவிட மத்திய அரசு முடிவு செய்திருப்பது குறித்து இந்த அரசு செய்யப்போவது என்ன?"

என்று திரு. என். வி. நடராசன் கேட்டார்.

அதற்கு அமைச்சர் கருணாநிதி பதிலளிக்கையில் கூறியதாவது:—

"இந்த இருப்புப் பாதைகளால் எவ்வளவு வருமானம் வருகிறது—எந்த அளவுக்கு இந்தப் பாதைகள் தேவைப்படுகின்றன என்ற விவரங்களைச் சேகரித்து அனுப்புமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

"நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை வந்துவிட்டது; அதன்பேரில், 'உதகை – மேட்டுப்பாளையம் பாதை எடுக்க வேண்டாம்' என்று கோரி, டில்லிக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது."

கே. இராமதாசு (காங்):— "இந்தப் பாதையை அகற்றக் காரணம் என்ன?"

அமைச்சர்:— "'வருமானம் குறைவு' என்று காரணம் கூறுகிறார்கள்."

தனியார் பள்ளிகளில் பண வசூல்

நிர்வாகிகளின் கோரிக்கை பற்றி அரசு ஆய்வு

பள்ளிகளின் பராமரிப்புக்காக மாணவர்களிடம் ஓரளவு பணம் வசூலித்துக்கொள்ள அனுமதிக்கும்படி தனியார் பள்ளி நிர்வாகிகளிடமிருந்து அரசுக்குக் கோரிக்கை வந்திருப்பதாகவும் இப்போது ஆய்வுக் குழுவின் ஆய்வுக்கு விடப்பட்டிருப்பதாகவும் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தி ஆசிரியர்களுக்கு மாற்று வேலை

திட்டம் தயாரிக்கிறார் கல்வித்துறை இயக்குநர்

சென்னை, பிப். 16—

"இதுவரையில் பள்ளிகளில் இந்தி ஆசிரியர்களாக இருந்தவர்களுக்கு மாற்றுவேலை தேடித் தருவது குறித்து ஆராய்ந்து திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொடுக்கும்படி மாநிலக் கல்வித்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்"

என்று கல்வித்துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்ற மேலவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

எம். இராசா அய்யர்:—"தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இந்தி மொழியைக் கற்பிப்பதற்காக 1966-67-ல் இந்திய அரசிடமிருந்து மானியம் பெறப்பட்டிருப்பின் அதன் விவரங்கள் என்ன?"

அமைச்சர்:—"1966—67-ல் அதிகப்படியான இந்தி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கு மத்திய அரசிடமிருந்து ரூ 96,000 மானியமாக பெறப்பட்டுள்ளது. 37 பகுதி நேர ஆசிரியர்கள் உட்பட 127 இந்தி ஆசிரியர்கள் நியமனத்துக்கென்று மத்திய அரசு இந்த மானியத்தை வழங்கியுள்ளது."

கே:—"சமஸ்கிருதம் போன்ற புராதன மொழிக்கு இத்தகைய மானியம் உண்டா?"

அமைச்சர்:—"தகவல் இல்லை."

இராஜா அய்யர்:—"1967 ஜூலை 11-ந் தேதிய அரசாங்க ஆணையின்படி, பள்ளிகளில் புதிய மொழிக் கொள்கை நிறைவேற்றப்படுவதன் காரணமாக தங்கள் பணி பாதுகாக்கப்படுவது குறித்து இந்திப் பண்டிதர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா? 'ஆம்' எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?"

அமைச்சர்:—"முறையீடு கிடைத்துள்ளது; தகுதிக்கேற்ப தக்க வேலைகள் அளிக்கப்படுகின்றது."

இராசா அய்யர்:— "அவர்கள் ஊதியம் குறையாத அளவு ஆசிரியர்கள் என்கிற முறையில அதற்குரிய சலுகைகளைக் கொடுத்துப் பாதுகாப்பு அளிக்கப்படுமா?"

அமைச்சர்:—"அதே நோக்கத்துடன்தான் மாற்றுவேலைத் திட்டம் அளிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொடுக்குமாறு கல்வித்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்."

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

'நிரந்தரமாக இருக்கும் யாருமே பாதிக்கப்படமாட்டார்கள். தற்காலிக ஆசிரியர்கள் விஷயத்தில் இத்தகைய உறுதி அளிப்பதற்கில்லை; ஆயினும், கல்வி இயக்குநரின் அறிக்கை கிடைத்த பிறகு மேலும் பரிசீலித்து ஆவனசெய்வோம்."

பழனியிலிருந்து தேவகோட்டைக்கு அரசுப் பேருந்து

தற்போது விடுவதற்கில்லை

சென்னை, பிப். 15—

"பழனியிலிருந்து நத்தம் வழியாகத் தேவகோட்டைக்கு அரசினர் விரைவுப் பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை"

என்று சட்டமன்றத்தில், பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி, கழக உறுப்பினர் எப். மலைச்சாமியின் கேள்விக்குப் பதிலளித்தார்.

"பழனியிலும், தேவகோட்டையிலும் 'டெப்போ' இல்லாத காரணத்தாலேயே இப்போது பஸ் விட வாய்ப்பில்லை"

என்று அமைச்சர் துணைக் கேள்விக்குப் பதிலளித்தார்.

'எல்லாப் பஸ்களையும் ஒரே நாளில் அரசுடைமையாக்க நிதிவசதியில்லை'

'படிப்படியாக இப்பணி தொடர்ந்து நடக்கும்'

'வேலையிழக்கும் தொழிலாளருக்கு மாற்றுவேலை கிடைக்கும்'--- சட்டமன்றத்தில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, பிப். 14—

தமிழ்நாட்டில் 1—1—68-ல் தனியார் துறையில் ஓடும் பஸ்கள் 4,543-ம், இருப்பில் உள்ள (ஸ்பேர்) பஸ்கள் 1,114-ம், பஸ்களை நடத்தும் உரிமையாளர்கள் 1,086 பேரும் இருந்ததாகச் சட்டமன்றத்தில் பொதுப் பணித்துறையமைச்சர் திரு. கருணாநிதி, திரு. ஏ. எம். இராஜாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மேலும் கேட்கப்பட்ட துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் வெளியிட்ட விவரம் வருமாறு:—

"ஒரே நேரத்தில் எல்லாப் பஸ்களையும் அரசுடைமையாக்க அரசிடம் நிதி வசதி இல்லாததால், 75 மைல் தொலைவுள்ள பஸ் தடங்களை மட்டும் அரசு மேற்கொள்வது என்று முடிவு செய்து அதனைச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நில உச்சவரம்பு செய்ததுபோல் தனியாரின் பஸ் உடைமைகளை உச்சவரம்பு செய்யும் உத்தேசமில்லை.

"தனியார் பஸ்களை அரசுடைமையாக்கும்போது வேலையிழக்கும் பஸ் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன; ஆனால், இதில் ஒரு கோளாறு ஏற்பட்டிருக்கிறது; பஸ் முதலாளிகள் சிலரிடம் வேலை செய்ததாகச் சான்றிதழ் பெற்றுக்கொண்டு பலர் வேலை கோருகின்றனர்; அவர்கள் உண்மையிலேயே வேலை செய்தவர்களா என்பதை அறிய முடியவில்லை.

"'டி. வி. எஸ். நிறுவனத்தின் பஸ்களை மட்டும் அரசுடைமையாக்காததேன்?' என்று எதிர்க் கட்சியின் மேடைகளில்கூடப் பேசப்படுகிறது; இதுபற்றி நான் விளக்க விரும்புகிறேன்.

"டி. வி. எஸ். நிறுவனத்தார் தங்கள் பஸ்களுக்கான உரிமத்தை 1972 வரை வாங்கி வைத்திருக்கிறார்கள். 1972வரை 75 மைல் தொலைவுக்கு ஓடும் அவர்களுடைய பஸ்களை அரசு தொடமுடியாது. அந்தக் கெடு முடிந்ததும், அப்படிப்பட்ட தடங்களில் ஓடும் பஸ்கள் கட்டாயம் அரசுடைமையாக்கப்படும்.

"இந்த அரசு பதவியேற்றபின், அரசுடைமையாக்கப்பட்ட 106 வழித் தடங்களில் 216 வண்டிகள் ஓடிக்கொண்டிருந்தன; இப்போது 280 அரசு பஸ்கள் அவற்றில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

"இந்த அரசு பதவியேற்றபின் 21 புதிய வழித்தடங்களில் பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன.

"அரசு பஸ்களில் 49 இருக்கைகள் இருப்பதுபோல் தனியார் பஸ்களிலும் 61-க்குப் பதிலாக 49 இருக்கைகளாகக் குறைக்க வேண்டுமானால், அரசுக்கு வருமானம் குறைந்துவிடும்.

"அரசுடைமையாக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட தனியார் பஸ் உரிமையாளர்கட்கு வேறு இடங்களில் மாற்றுத் தடங்கள் வழங்குவது பற்றி ஆலோசிப்பதாக அரசு அறிவித்திருக்கிறது."

நல்லம்பாக்கத்திற்குப் புதிய ஏரி

ஆய்வு நடத்த ஆணை

சென்னை, பிப். 15—

திண்டிவனம் வட்டம் மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் நகர் கிராமத்தைச் சேர்ந்த நல்லம்பாக்கத்திற்கு ஒரு புதிய ஏரி கட்டிக் கொடுக்கக் கோரி, 1966 மே திங்களில் நீர்ப்பாசன அமைச்சருக்கு ஊராட்சித் தலைவர் மூலம் முறையீடு அனுப்பப்பட்டதாகவும், அதுபற்றிப் புலனாய்வு செய்யுமாறு மேற்பார்வைப் பொறியருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி, சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் ஏ. ஜி. பாலகிருஷ்ணன் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

தமிழக வரவு-செலவுத் திட்டம்

பிப். 28-ல் அளிக்கப்படும்

சென்னை, பிப். 16—

தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டம் பிப். 28-ம் நாள் சட்டமன்றத்தில் அளிக்கப்படும்.

தற்போது நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடர் பிப். 20-ம் நாளுடன் முடிந்து மீண்டும் பிப். 28-ம் நாள் தொடங்கும்.

மேலவைக் கூட்டம் பிப். 21-ம் நாளுடன் முடியும்.

சென்னை 1-வது வட்டத்தில் பொங்கல்விழா

நிகழ்ச்சிகள்

சென்னை 1-வது வட்டத்தில் 15—1—68 காலை 9-மணியளவில் கிளைக்கழகப் பணிமனையில் எஸ். சுந்தரம் தலைமையில் தி. மு. மாரிமுத்து கழகக் கொடியினை உயர்த்தியபின், அனைவருக்கும் தி. பத்மனாபன் இனிப்பு வழங்கினார்.

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் காலை 9-30 மணியளவில் வட்டச் செயலாளர் து. கோவிந்தசாமி தலைமையில் எம். எஸ். இராசாமணி கழகக் கொடியை உயர்த்தியபின், தங்கராசு, கோதண்டம், இளங்காளி, திராவிடதுரை, அருணாசலம் ஆகியோரும் பேசினர். சி. என். இரத்தினம் கரும்பு வழங்கினார்.

கே. வி. கே. சாமி படிப்பகச் சார்பில் காலை 10-மணியளவில் தி. பத்மனாபன் தலைமையில், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., எம்.சி. கழகக் கொடி ஏற்றினார். து. வேணுகோபால் எம்.சி, தீனதயாளன், து. கோவிந்தசாமி, நீலகண்டன், ஏழுமலை, உமாபதி, வேழவேந்தன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர். உணவு வழங்கப்பட்டது.

சேணியம்மன்கோயில் தெரு கழக ஆதரவாளர் சார்பில் காலை 10-15 மணியளவில், து. கோவிந்தசாமி தலைமையில் புருஷோத்தமன் கழகக் கொடி ஏற்றினார். கோயில் பிள்ளை அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

மக்கள் முன்னேற்ற மன்றச் சார்பில் காலை 11-மணியளவில், து. கோவிந்தசாமி தலைமையில எத்துராசன் கழகக் கொடியேற்றினார்; ஆர். ஏ. முத்து, செல்வரங்கம், கோபால் ஆகியோர் பேசினர். பொங்கல் வழங்கப்பட்டது.

வள்ளுவர் மன்றச் சார்பில் 16—1—68 10-மணியளவில், கோ. இளங்காளி தலைமையில் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர். கண்ணன் கழகக் கொடியேற்றினார். தோழர்கள் பாலகிருட்டினன், சந்திரன், அருணசலம், ஜெகதீசன், கோவிந்தசாமி, திராவிடதுரை, கோதண்டன், சி. என். இரத்தினம் ஆகியோர் பேசினர்; கரும்பு வழங்கப்பட்டது.

நாவலர் நெடுஞ்செழியன் குடிசைவாழ்வோர் மன்றச் சார்பில் காலை 11-மணியளவில் தி. பத்மனாபன் தலைமையில் து. வேணுகோபால் எம்.சி. கழகக் கொடியேற்றினார்; தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர். கண்ணன், து. கோவிந்தசாமி, உமாபதி, செல்வராயன், ஏ. கிருட்டினன், மு. மாரிமுத்து, ஐ. நாகப்பன், ஆர். ஏ. முத்து, செல்வரங்கம் ஆகியோர் பேசினர்; தோழர்கள் ஜி. முனியப்பன், சுப்பிரமணி ஆகியோர் பொங்கல் வழங்கினர்.

'இந்தி மொழி ஏகாதிபத்தியத்தை ஏற்க முடியாது'

ஆந்திரச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் விளக்கம்

எதிர்க் கட்சித் திருத்தத்துடன் அரசுத் தீர்மானம் நிறைவேற்றம்

ஐதராபாத், பிப். 15—ஆந்திரச் சட்டமன்றத்தில் அரசு கொண்டுவந்த மொழிப் பிரச்சினை பற்றிய தீர்மானம், எதிர்க் கட்சியினரின் திருத்தத்துடன் நிறைவேறியிருக்கிறது.

"மொழிப் பிரச்சினை பற்றி ஆலோசனை செய்ய அனைத்துக் கட்சி மாநாடு ஒன்றைத் தலைமையமைச்சர் கூட்ட வேண்டும்; இம்மாநாட்டில், எல்லா முதலமைச்சர்களும் கலந்துகொள்ள வேண்டும்"

என்று கூறும் எதிர்க் கட்சியினரின் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதாக முதமலமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அறிவித்தார்.

"மொழிப் பிரச்சினையில், நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தைத் திருத்தியமைக்க வேண்டும்; மத்திய அரசு உத்தியோகங்களிலும் அனைத்திந்திய சர்வீசுகளிலும் சேருவதில் எந்த மொழி மக்களுக்கும் தடைகள் ஏதும் இல்லாதவாறு உறுதியான ஏற்பாடு செய்யவேண்டும்" என்று, அரசுத் தரப்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

ஆங்கிலமும் தெலுங்கும் கொண்ட இருமொழித் திட்டத்தை வற்புறுத்தும் திருத்தமும், நாடாளுமன்றத்தில் நிறைவேறிய மொழித் தீர்மானத்தின் அமலை நிறுத்திவைக்கக் கோரும் திருத்தமும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

'மொழி ஏகாதிபத்தியத்தை ஏற்க முடியாது' என்கிறார்

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் போராடிய மக்கள், எந்த மொழி ஏகாதிபத்தியத்தையும் ஏற்க முடியாது; 'எந்த மொழி மக்களுக்கும் மொழிப் பிரச்சினையில் இடையூறு ஏற்படக்கூடாது' என்ற உறுதியை நிலைநாட்டுவதுதான் தீர்மானத்தின் நோக்கமாகும்; அதுதான் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழியாகும்"

என்று விவாதத்திற்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

இராஜஸ்தானையும் கவர்கிறது தி. மு. க.!

கழகத்தைப்போன்றதொரு கட்சி துவங்க முயற்சி!

ஜெய்ப்பூர், பிப். 16—தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கும் தி.மு. கழகத்தின் தலைவர்களுடன் அண்மையில் பேச்சு நடத்திய இராஜஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் மகாராஜா கர்ணி சிங், தி.மு. கழக பாணியில் இராஜஸ்தானில் ஒரு சக்திவாய்ந்த புதிய அரசியல் கட்சியைத் துவக்க முடிவு செய்திருக்கிறார்.

தமிழகத்தில் மக்களைக் கவர தி.மு. கழகம் கையாண்ட முறைகளை இராஜஸ்தானிலும் பின்பற்றினால் தமது புதிய கட்சி விரைவில் மக்களின் ஆதரவைப் பெற்றுவிடும் என்று அவர் கருதுகிறார்.

'இராஜஸ்தான் சனநாயகசோஷலிஸ்டுக் கட்சி' என்ற பெயரில் மாநில அடிப்படையில் புதிய கட்சி ஒன்றைத் தொடங்க இருப்பதாக அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற முன்னாள் மன்னர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட அவர், 'மாநிலத்தில் இப்போது இயங்கிவரும் அரசியல் கட்சிகளின் 'நடத்தை' திருப்திகரமாக இல்லை' என்று கருத்தறிவித்தார்.

"இராஜஸ்தானிலுள்ள எதிர்க் கட்சிகள் அனைத்தும் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஓர் அணியில் திரள வேண்டும்; எதிர்க் கட்சிகளால் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்ற இயலாமலிருப்பதற்குக் காரணம் காங்கிரசுக் கட்சியோ, பொதுமக்களோ அல்ல; எதிர்க் கட்சிகள் சரிவர நடந்துகொள்ளாததுதான் அதற்குக் காரணமாகும்' என்று அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

துண்டு விழும்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"மாணவிகளுக்குள்ள உயர்நிலை—இடைநிலைக் கட்டக் கல்விச் சலுகை, மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்; இதனால் ஏற்படும் அதிகச் செலவு ரூ. 75 இலட்சமாகும்" என்றும் அவர் அறிவித்தார்.

மத்திய அரசின் போக்கால் புதிய தொல்லை உருவாகும்

"நாடாளுமன்றம் நிறைவேற்றிய ஆட்சி மொழித் தீர்மானத்தால், இதுவரையில் சமூகமாக நடைபெற்றுவந்த மும்மொழித் திட்ட அமுல், இனி, தொல்லைகளை விளைவிக்கக் கூடும் என அஞ்சுகிறோம்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நடக்க இருப்பவை

18-2-68

திண்டுக்கல்

6-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு மேற்கு ரத வீதியில் (அண்ணா மன்றம் அருகில்); தலைவர்: என். முத்து; பேசுவோர்: சி.பி. சிற்றரசு எம்.எல்.சி., பெ.ஜீவானந்தம், வி.இ.பாலு.

பாலர் அரங்கம்

பிப். 16, 17, 18 தேதிகளில்
மாலை 4 மணிக்கு

'நன்றி மறவாத நாய்'

கட்டணம் :
சிறுவர்களுக்கு : 20 காசு
பெரியவர்களுக்கு : 40 காசு

வருந்துகிறோம்

சென்னை, பிப். 16—'நம் நாடு' அலுவலகத்தில் பல ஆண்டுகளாக அச்சுக்கோப்பாளராகப் பணியாற்றிவந்த தோழர் சி. சண்முகம் அவர்கள், இன்று காலை இயற்கையெய்தியதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நான்கு குழந்தைகளையும், மனைவியையும், அன்னையையும்விட்டுப் பிரிந்த அவருக்கு வயது 39.

அவர் என்புருக்கி நோயால் பாதிக்கப்பட்டு அகால மரணமடைந்த செய்தி கேட்டுத் துயருறுகிறோம். அவர்தம் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த பரிவையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—(ஆ-ர்.)

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

'கழக ஆட்சியில் குறை இருக்கமுடியாதே' என்ற நம்பிக்கையாலும், 'இருக்கக்கூடாதே' என்ற அக்கறையினாலும் உந்தப்பட்ட சுதந்தரக் கட்சி உறுப்பினர் ஒருவர்—நேற்றைய சட்டமன்ற நிகழ்ச்சிகளின்போது, இராமநாதபுரத்தின் பல பகுதிகளில் மின்சார பல்புகள் பழுதுபட்டமையால் ஏற்பட்டிருக்கும் 'இருள் நிலைமை' பற்றி எடுத்துரைத்திருக்கிறார்.

'சொந்த மாவட்டம்' என்ற தனிப்பட்ட பொறுப்பில், அந்த உறுப்பினரின் உரைக்கு விளக்கம் அளித்துள்ள சட்ட அமைச்சர் செ. மாதவன், ஒளியூட்டும் பதிலொன்றைத் தந்திருக்கிறார்.

'உதயசூரியன்' ஆட்சியில் இருள் நிலைமையா?' என்று கேட்ட சுதந்தரக் கட்சி உறுப்பினருக்கு, 'உதயசூரியன் ஆட்சியில் இருள் இருக்காது—இருக்கமுடியாது; ஆனாலும், 'நட்சத்திரம்' அந்த ஒளியை வழங்கிவிடவும் முடியாது' எனக்கூறி, 'கடிதோச்சி மெல்ல எறியும்' வகையில் பதிலளித்திருக்கிறார் அமைச்சர் மாதவன்.

அதற்கு முன்தினம், இதே பிரச்சினைமீது பதிலளிக்கையில், **தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்** அவர்கள், 'அடிக்கடி பழுதுபடாத வகையில் மின்சாரப் பல்புகள் வாங்கும் புதிய ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது' என அளித்துள்ள விளக்கம் ஒன்றினை, அந்தச் சுதந்தரா உறுப்பினர் கவனத்தில் கொண்டிருக்கலாம்!

★

ஒரு படி அரிசித் திட்டத்தின் சாதனைச் சின்னமாய் விளங்கும் **அமைச்சர் கே. ஏ. மதியழகன்** அவர்களின் உணவுத் துறை, வாழ்க்கைப் பொருள்களின் விலை கடந்த ஓராண்டுக் காலத்தில் பெரும் அளவுக்குக் குறைந்திருக்கும் மற்றொரு சிறப்புக்கும் காரணமாக அமைந்திருக்கிறது.

காங்கிரசின் ஆட்சிக் காலத்தில், 1966-ம் ஆண்டு சனவரித் திங்களில் 620 புள்ளிகளிலிருந்து டிசம்பர் மாதத்தில் 701 புள்ளிகளாக உயர்ந்த வாழ்க்கைச் செலவு, கழக நிர்வாகத்தின்போது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது!

அவர்கள் காலத்தில்—ஓராண்டில்—80 புள்ளிகள் உயர்ந்த வாழ்க்கைச் செலவு, கழக ஆட்சியில்—ஓராண்டுக் காலத்தில் 20 புள்ளிகள் மட்டுமே உயரும்வகையில் பார்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற உணவு அமைச்சரின் அறிவிப்பு, இதற்கு முன் விலைவாசிப் புரளியினைக் கிளப்பிவிட்ட பல காங்கிரசு உறுப்பினர்களின் முறையற்ற குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிப்பதாக இருக்கிறது! இனி அவ்வாறு பேச முயலுவோரின் வாயை அடைப்பதாக அமைகிறது!

★

இங்கும் அங்கும் காங்கிரசுக்காரர்களே ஆண்டபோது கிடைக்காத அதிக அளவு உர வினியோகத்தை, கழக ஆட்சிக் காலத்தில் பெற முடிந்திருக்கிறது என்ற மற்றொரு சிறப்பினைத் தந்து பெருமைப்பட்டுக்கொள்ள வழிகாட்டியிருக்கிறார் **—வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி.**

முதலமைச்சர் அண்ணா, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் ஆகியோரின் பெருமுயற்சியால், இந்த நடப்பு ஆண்டில் மத்திய அரசு 1,05,000 டன் உரம் அதிகப்படியாக வழங்கியிருக்கிறது என்ற செய்தியினை அறியும்போது, இரண்டு இடங்களிலும் காங்கிரசே கொடி கட்டி ஆண்டபோது, புதுடில்லியின் கதவுகளைத் தட்டிவிட்டு வெறுங் கையுடன் வந்த முதலமைச்சர்கள், நமது மனக்கண்களில் தெரியாமல் இல்லை!

★

பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் பொறுப்பில் உள்ள அரசினர் பஸ் போக்குவரத்தில் அண்மைக் காலமாகப் பளிச்சிட்டுப் பிரகாசிக்கும் நிர்வாகத் திறமையும், மணம் பரப்பும் தமிழ்ப் புழக்கமும், பாராட்டுதல்களைப் பெற்றுத் தரும் அதே தருணத்தில், காழ்ப்பு உணர்ச்சிகளையும் அரசியல் அடிப்படையில் எழுப்புகிறது என்பதற்கு, காங்கிரசுக்காரர்கள் சிலர் நேற்றையத்தினம் சட்டமன்றத்தில் எழுப்பியுள்ள சில வினாக்கள், சரியான அடையாளமாக இருக்கின்றன.

குறையே காணமுடியாத ஒரு மனைவியிடம், 'எப்படியும் கடிந்துகொள்ளவேண்டும்' எனத் தீர்மானித்த கணவன், 'சாப்பாட்டைப் போட்டுவிட்டு முதுகைக் காண்பித்துக்கொண்டு திரும்பிப் போகிறாயே—என்ன அலட்சியம்?' என்று கேட்டு வைத்தானாம்!

பிரயாணிகள் உட்காரும் இடத்தில், 'பெண்கள்' என ஆங்கிலத்தில் எழுதப்படாததால் அவதிக்குள்ளான தமிழ் தெரியாத ஒருவரின் கதையைக் கூறி, அரசினர் பஸ்களில் காணப்படும் தமிழ் மணத்தின் மீது 'வாடை'க் காற்றை வீசியிருக்கிறார் திரு. வினாயகம்!

இனிக்கும் தேனை எடுக்கும்போது ஒரு சில துளிகள் சிந்தலாம்; அல்லது தேனீக்கள் கொட்டலாம்; ஆனால், 'இலட்சியம் தேனாக இருக்க வேண்டுமென்பதுதான் முக்கியம்' என்ற அடிப்படையில், 'பாண்டிச்சேரிக்கு அருகில் உருவாக இருக்கும் உலக நகர்' பற்றிக் கழக உறுப்பினர் ஏ ஜி. பாலகிருஷ்ணன் எழுப்பிய சில ஐயப்பாடுகளுக்கும், குறைகளுக்கும் தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன், மனநிறைவு தரும் பதிலொன்றைத் தந்திருக்கிறார்—

"இருநூறு கோடி ரூபாய்ச் செலவில் ஐ. நா. ஈடுபாட்டுடன் உலகின் பல நாடுகள் பங்குகொள்ளும் 'உலக நகர்', தமிழகத்தில் அமைவதற்கு நாம் பெருமைகொள்ள வேண்டும்; அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்; இதனால் அப்பகுதியில் ஏற்கனவே உள்ள மக்களுக்குத் தக்க பரிகாரம் காண்பதிலும் அரசு கவனம் செலுத்தும்"

என்று, நெடுஞ்செழியன் அவர்கள் தந்துள்ள விளக்கம், 'உலக நகர்' வருவதால் சில பல வகைகளில் பாதிப்புக்குள்ளாகும் அப்பகுதி மக்களுக்கு திருப்தி அளிப்பதாக இருக்கிறது!

★

பட்டுக்கோட்டை ஒரத்தநாடு பகுதி மக்களுக்கு, கொள்முதல்—வரி வசூல் ஆகியவற்றில் சலுகைகளும், விதிவிலக்கும் கேட்கும் **எல். கணேசன்,** தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சைக்கு, கொள்முதல் செய்யப்படும் நெல்லில் குறிப்பிட்ட பகுதியினை ஒதுக்க வேண்டுமெனக் கோரியிருக்கிறார்.

தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் வந்த விளைச்சல் பற்றுக்குறையை அல்ல—தஞ்சைத் தரணி இப்போது அனுபவித்துவருவது; பெய்த பெருமழைதான் அப்பகுதியில், விளைச்சலைப் பாதித்துவிட்டிருக்கிறது!

'புதிதாகப் பிறந்த மாவட்டம்' என்ற வகையில், தருமபுரிக்கு, சிறப்பான பரிவுகளைக் கேட்டிருக்கிறார்**—எம். சுப்பிரமணியம்.**

'புதிது' என்பதுடன், 'பின்தங்கிய பகுதி' என்ற வகையிலும் தருமபுரிக்காக அவர் கேட்கும் அதிகப்படியான சலுகை, 'தேவை' அடிப்படையை ஒட்டியதே ஆகும்!

"படி அரிசித் திட்டத்தினையும், மொழிப் பிரச்சினையையும் காங்கிரசுக்காரர்கள்—இரட்டைப் போக்குடன்—அரசியல் பகடைக் காய்களாக விளையாடுகிறார்கள்" என்பதனைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார், **என். வீராசாமி.**

"அவர்கள் கையாளும் ஆயுதங்கள், அவர்களையே திருப்பித் தாக்குவதாக இருக்கிறது" என்ற எச்சரிக்கையும் வீராசாமியின் உரையில் இருக்கிறது!

அரசியல் நிலைமைகளை வைத்து மதிப்பிட்டு, 'கழகம்தான் இன்னும் பல காலம் தமிழகத்தை ஆளும்' எனப் பலரும் சொல்லுவதை, 'காங்கிரசுக்காரர்கள் ஏற்கமாட்டேனென்கிறார்களே' என்பதனால் தானோ என்னவோ**—ஆர். நாகசுந்தரம்** அவர்கள், காங்கிரசுக்காரர்களிலேயே பலர் நம்பிக்கை வைத்திருக்கும் ஆரூடமும், 'தமிழகத்தைத் தொடர்ந்து கழகம்தான் ஆளும்; அதனால் பல சாதனைகள் தோன்றும்' எனக் கூறுவதாக எடுத்துக் காட்டியிருக்கிறார்!

சட்டமும் அமைதியும் கெட்டுவிட்டதாகக் காங்கிரசுக்காரர்கள் எழுப்புவது, 'வெறும் கூச்சல்தான்' என்பதனை அம்பலப்படுத்தியிருக்கிறது**—கே. எம். இராசகோபால்** அவர்களது உரை!

"1965-ல் போலீசுத் தர்பார் நடத்திய காங்கிரசுக்காரர்கள், 1967-க்குப்பின் சட்டமும் அமைதியும் கெட்டுவிட்டதாகக் கூறுவது, சைத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது" என்ற அருமையான உவமை நயத்தினைக் கொடுத்திருக்கிறார்**—வி. மலைக்கண்ணன்!**

கழகம் தொடர்ந்து கைத்தறியாளர்கள் நலனில் அக்கறை காட்டுகிறது என்பதனைக் காட்டும் வகையில், அவர்களது பிரச்சினைகள் பலவற்றுக்காக வாதாடியிருக்கிறார்**—வி. எஸ். எஸ். மணி.**

"கல்வி போன்ற சில துறைகளில் நெசவாளர்களுக்குச் சிறப்பான சலுகைகள் காட்டவேண்டும்" என்று கோரிக்கை தந்திருக்கும் அவர், 'நெசவாளர்களுக்கு நிரந்தரப் பரிகாரம் ஏற்பட குழு ஒன்றினை அமைக்கவேண்டும்' எனவும் விரும்பியுள்ளார்.

பல்வேறு தொழிலில் ஈடுபட்டவர்களும் நிரம்பியுள்ள கிராமப்புறங்களில், நெசவாளர்களுக்கு மட்டும் 'குடும்பக் கார்டு' முறையை அமுலாக்குவதில் உள்ள சிரமங்களை அவர் எண்ணியிருப்பது நல்லது.

'சமூக விரோதி'கள் கைது

சமூக விரோதிகள்' எனக் கருதப்பட்ட 98-பேர்களை மதுரை நகரின் பல பகுதிகளிலுமிருந்தும் போலீசார் கைது செய்துள்ளனர்.

'காங்கிரசு அனுதாபிகள்' எனக் கூறப்படும் பத்து நபர்களையும் போலீசார் கைது செய்து, சப்-மாஜிஸ்திரேட் முன்னிலையில் நிறுத்தினர்; பின்னர் அவர்கள் 'பொறுப்பில்' விடப்பட்டுள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.